# “புதுச்சேரிக்கு முழு மாநில அந்தஸ்து தேவை இல்லையாம்!”

## மக்களவையில் – டி.ஆர்.பாலுவுக்கு உள்துறை அமைச்சர் பதில்!

புதுடெல்லி, மார்ச்.26-

ஒன்றிய பிரதேசமாக உள்ள புதுச்சேரிக்கு முழுமையான மாநில அந்தஸ்து, ஒன்றிய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்ட வட்டியை 9.1 சதவீதமாக உயர்த்துதல், நலிவடைந்து வரும் வங்கதேசத்துடன் ஆன இருதரப்பு உறவு, நிதி உதவிகளில் மேம்பாடு உள்ளிட்ட மூன்று கேள்விகளை தி.மு.க மக்களவைக் குத் தலைவரும் ஸ்ரீபெரும்புதூர் மக்களவை உறுப்பினருமான டி.ஆர். பாலு அவர்கள் எழுப்பி இருந்தார். இந்தக் கேள்விகள் அனைத்தும் நேற்று முன்தினம் (24.03.2026) பதிலளிப்புக்கு வந்தன.

ஒன்றிய உள்துறை, வெளியுறவுத் துறை மற்றும் நிதித் துறை களின் அமைச்சர்கள் இந்த வினாக்களுக்கு பதில் அளித்தனர்.

எழுத்து பூர்வமாக மூன்று அமைச்சர்களும் அளித்த பதில்களின் விவரங்கள் பின் வருமாறு :

**புதுச்சேரிக்கு முழுமாநில அந்தஸ்து!**

ஒன்றியப் பகுதியாக இருந்து வரும் புதுச்சேரிக்கு முழு மாநில வழங்கப் பட வேண்டும் என்ற அப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்று அதனை நிறைவேற்ற உள்ளதா? அப்படியானால் அதன் விவரம் என்ன? கோரிக்கை ஏற்கப்பட மாட்டாது என்றால் அதற்கான காரணம் என்ன? என டி.ஆர்.பாலு தனது வினாவில் கேட்டிருந்தார்.



இதற்கு இன்று பதிலளித்த உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் அவர்கள், தற்சமயம் அரசியலமைப்பு சட்டம் 239 (A) ன் கீழ் புதுச்சேரி சட்டமன்றத்துடன் கூடிய ஒன்றியப் பகுதியாக, துணைநிலை மாநிலமாக அமைக்கப் பட்டுள்ளது. அதனை திறம்பட நிர்வகிக்கவும் பொதுநன்மையை வழங்கிடவும் தேவையான நிர்வாக அமைப்பு, ஆட்சித்திறன் ஆகியவற்றை தற்போதைய அரசியலமைப்பு மற்றும் சட்டம் சார்ந்த கட்ட மைப்பினை தற்போதைய துணைமாநில நிலையே அளிக்கிறது, என தனது பதிலில் தெரிவித்துள்ளார். இதன்மூலமாக புதுச்சேரிக்கு முழு அளவிலான மாநில அந்தஸ்தும் அதிகாரங்களும் அவசியம் இல்லை தற்போதைய துணைமாநில அந்தஸ்தே போதுமானதாக உள்ளது என ஒன்றிய அரசு நாடாளுமன்ற த்தில் ஒளிவுமறைவு இல்லாமல் தெரிவித்துள்ளதைத்தான் உள்துறை அமைச்சரின் பதிலில் இருந்து தெளிவாகிறது.

**குறைக்கப்பட்ட செல்வமகள் சேமிப்பு திட்ட வட்டிவிகிதம் ஆரம்ப அளவுக்கு(9.1%) உயர்த்தப் படுமா?**

சுகன்யா சம்ரித்தி யோஜனா என்ற பெயரில் பத்துவயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளின் நலனை காக்க 2015 முதல் ஒரு திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. தொடங்கப் பட்ட போது, இந்த செல்வமகள் சேமிப்பு திட்டத்தின் கீழ் வைக்கப் பட்டுள்ள சேமிப்பின் மீது 9.1 சதவீதம் வட்டி வழங்கப் பட்டது. சென்ற பத்தாண்டுகளில் வட்டி வீதம் கடுமையாக குறைக்கப் பட்டு விட்டது. எனவே, பெண்குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதி செய்யும் நோக்கில் செயல்படுத்த பட்டு வரும் இந்த திட்டத்தில் வட்டிவிகிதம் பழைய படி 9.1 விழுக்காடு அளவுக்கு உயர்த்தப் படுமா என்று திரு. டி.ஆர். பாலு எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஒன்றிய நிதித் துறை இணை அமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி அவர்கள் வட்டி விகிதம் 2024 ஜனவரி முதல் 8.1 விழுக்காடு அளவிலேயே தொடரும் எனத் தெரிவீத்துள்ளார்.

**வங்கதேசத்துக்கான நிதியுதவி, இருநாட்டு உறவில் கடும் பின்னடைவா?**

வங்கதேசத்துக்கு இந்திய 2014 முதல் தொடர்ந்து நிதி உதவிகள், இந்திய துறைமுகங்களில் வங்கதேசப் பொருட்கள் இறக்குமதிக்கு முன்னுரிமை உள்ளிட்ட ஆதரவுக்குப் பிறகும் அண்மையில் வங்கதேசத்துடனான உறவு நலிவடைந்த காரணம் என்ன, இறக்குமதி முன்னுரிமை மீண்டும் கொண்டுவரப் படுமா என்பது உள்ளிட்ட பல்வேறு வினாக்களை டி.ஆர்.பாலு அவர்கள் தனது கேள்வியில் எழுப்பினார்.இதற்கு பதில் அளித்த வெளி உறவுத்துறை இணை அமைச்சர் திரு.

கீர்த்தி வர்தன் சிங் அவர்கள் 2014 முதல் 650 கோடி ரூபாய் அளவுக்கு வங்கதேசத்துக்கு இந்திய அரசு கடன் மற்றும் நிதி உதவி செய்துள்ளது. இருப்பினும் 202122 ல், ரூ.219.53 கோடியாக இருந்த நிதி உதவி 202526 ல் ரூ.25.01 கோடியாக வீழ்ச்சி அடைந்துள்ளதை அமைச்சரின் பதிலில் உள்ள புள்ளி விவரம் தெரிவிக்கிறது. வங்க தேசத்தில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு இந்தியாவின் கடல் துறைமுகங்களில் இறக்குமதிக்கு முன்னுரிமை அளிப்பது தொடர்பான கொள்கை முடிவு சம்பந்தப் பட்ட அனைத்து கூறுகளையும் கருத்தில் கொண்டு இறுதி செய்யப்படும். வங்க தேசத்துடனான உறவு அண்டை நாடு என்ற முக்கியத்துவத்தையும் நெடுங்கால ஆழமான வரலாற்று சிறப்பு மிக்க நட்பு, கலாச்சாரம் மற்றும் மொழிப் பிணைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மேலும் பேணி வலுப்படுத்த இந்தியா ஆவன செய்யும் எனவும் அமைச்சர் தன் பதிலில் தெரிவித்தார்.

---

### சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் – 2026

# தலைமைக் கழகத்தின் சார்பில் ஊடக பணிக்குழு

### தலைமைக் கழக அறிவிப்பு

வருகிற 23.4.2026 அன்று நடைபெற உள்ள சட்டப்பேரவைப் பொதுத்தேர்தலில், ஊடகங்களுடன் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை அண்ணா அறிவாலயத்தில் “ஊடக பணிக்குழு” பின்வருமாறு அமைக்கப்படுகிறது.

1. திரு. **எஸ். ஆஸ்டின்**
2. திருமதி. **தமிழச்சி தங்கபாண்டியன்,** எம்.பி.,
3. திரு. **வி. கலாநிதி வீராசாமி,** எம்.பி.,
4. திருமதி. **கனிமொழி என்.வி.என் சோமு**
5. வழக்கறிஞர் **ஏ.சரவணன்**

மேற்குறிப்பிட்ட ஊடக பணிக் குழுவினர், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களை தொடர்பு கொண்டால், அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 24.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

**தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தல்**

# திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச்.26-

தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தல் துறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, பிரதான் மந்திரி கிசான் சம்படா யோஜனா (PMKSY), உற்பத்தி இணைப்பு ஊக்கத் திட்டம் (PLI) மற்றும் பிரதான் மந்திரி மைக்ரோ உணவு பதப்படுத்தல் நிறுவனங்கள் திட்டம் PMFME ஆகியவற்றின் கீழ் தமிழ்நாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மற்றும் செயல்பாட்டில் உள்ள திட்டங்கள் எத்தனை? அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு விவரங்கள் என்ன?

மேலும், உணவு பூங்கா க்கள், cold ஸ்டோரேஜ் கட்டமைப்புகள் மற்றும் மதிப்பு



கூட்டல் அலகுகள் அமைப்பதற்கான முன்மொழிவுகள் நிலுவையில் உள்ளனவா? மைக்ரோ உணவு பதப்படுத்தல் நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை விரைவு படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு மத்திய உணவு பதப்படுத்தல் தொழில்துறை இணை அமைச்சர் ரவ்நீத் சிங் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.

அந்த பதிலில் :

தமிழ்நாட்டில் PMKSY திட்டத்தின் கீழ் மொத்தம் 104 உணவு பதப்படுத்தல் திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இதில் 72 திட்டங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன.

PMFME திட்டத்தின் கீழ் 17,869 மைக்ரோ உணவு பதப்படுத்தல் நிறுவனங்களுக்கு கடன்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இதில் 16,149 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

PLI திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 19 இடங்களில் உணவு பதப்படுத்தல் திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவை அனைத்தும் செயல்பாட்டில் உள்ளன.

PMFME திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பங்காக ரூ.532.41 கோடி தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தத் திட்டங்களின் கீழ் மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், PMKSY மற்றும் PMFME திட்டங்கள் தேவைக்கேற்ப செயல்படுத்தப்படும் திட்டங்களாக இருப்பதால், விண்ணப்பங் கள் ஆன்லைன் முறையில் பெறப்பட்டு விரைவாக ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மைக்ரோ உணவு பதப்படுத்தல் நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை விரைவு படுத்த மாநில அரசுகள் மற்றும் வங்கிகளுடன் மத்திய அரசு முறையான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வருவதாகவும், அவை தொடர்பான சிக்கல்கள் மாநில அளவிலான வங்கிகள் குழு மற்றும் நிதி சேவைத் துறையில் தீர்த்து வைக்கப்படுகின்றன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# சர்வதேச கலாச்சார பரிமாற்றத் திட்டங்கள்: நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 26 -

இந்தியப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பரப்பவும் மேம்படுத்துவதற்கும் பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சர்வதேச கலாச்சார பரிமாற்ற திட்டங்களை செயலாக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக கலாச்சார பரிமாற்ற திட்டங்களை செயலாக்க ஒன்றிய அரசு ஏதேனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதா?



அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலை பண்பாடு வரலாற்றாசிரியர்கள் பல்வேறு நாடுகளுக்கு மேற்கொண்ட ஆய்வுகளின் விவரங்கள்

மற்றும் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலை வரலாற்றாசிரியர்களை பல்வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்கு ஒன்றிய அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா? அதன் விவரம் தருக?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்ததால்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் உட்பட 115 நாடுகள் தங்களது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பரஸ்பரம் மேம்படுத்தும் கலாச்சார பரிமாற்ற திட்டங்களை (CEPs) செயல்படுத்தும் நோக்கில்

இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம் உடன் கலாச்சார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்திய அரசு கலாச்சார அமைச்சகம், இந்த சர்வதேச கலாச்சார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பட்டியல் இணைப்புI கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் சர்வதேச கலாச்சார பரிமாற்ற திட்டத்தில் கலாச்சார பரிமாற்ற திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பட்டியல் இணைப்புII இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தொல்லியல் மற்றும் பண்டைய வரலாற்று நினைவுச் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, இந்திய தொல்லியல் துறையில் ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டில் தொல்லியல் ஆய்வாளர் அடங்கிய குழுக்கள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இருப்பினும், இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலை பண்பாடு வரலாற்றாசிரியர்களுக்கான அயல்நாட்டு பயணங்களுக்கென்று தனியாக பட்ஜெட் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

---

**மேற்காசியப் போர் பதற்றத்தால்**

# கடுமையாகப் பாதிக்கப்படும் தொழில்துறையினர் - ஏற்றுமதியாளர்கள்!

## பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமல் மெத்தனம் காட்டும் ஒன்றிய அரசிற்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச்.26-

மேற்காசியப் போர் பதற்றத்தால் இந்தியாவின் தொழில்துறையினர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சந்தித்து வரும் கடுமையான பாதிப்புகள் குறித்து ஒன்றிய வர்த்தகத்துறையிடம் கேள்விகள் எழுப்பினேன். இதில், வர்த்தகத்திற்கு மாற்றுப்பாதைகள் முடிவு செய்யப்பட்டுள்ளதா, தொழில்துறை மற்றும் ஏற்றுமதியாளர்களைக் காக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா போன்ற விவரங்களை ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு கிடைத்துள்ள பதில்களில் இருந்து, ஒன்றிய அரசு தெளிவான திட்டங்கள் மற்றும் உறுதியான பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றி மெத்தனமாக செயல்பட்டுக் கொண்டிருப்பது உறுதியாகியுள்ளது.

**1. தமிழ்நாடு முதலமைச்ச ரின் கூற்றை உண்மையாக்கிய ஒன்றிய அரசு:**

மேற்காசியப் போர் பதற்றத்தை முன்கூட்டியே உணர்ந்து நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசைப் பார்த்து,



“Preparedness cannot be outsourced to the people” என்று விமர்சித்தார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

இந்த வார்த்தைகளை அப்படியே உண்மையாக்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

நாட்டு மக்களை நோக்கி இந்தச் சூழலுக்கு தயாராகுங்கள் என்று சொல்லும் ஒன்றிய அரசு, இதனால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்துறையினர் மற்றும் ஏற்றுமதியாளர்களை காக்க எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**2. ஈரோடு உள்ளிட்ட தொழில் நகரங்களில் முடங்கிய ஏற்றுமதி:**

சரக்குக் கப்பல் போக்குவரத்து கட்டணம் பலமடங்கு அதிகரிப்பு மற்றும், ‘போர் அபாயக் கூடுதல் கட்டணம்’ என்ற பெயரில் கூடுதல் பணம் வசூலிப்பு ஆகியவற்றால் ஈரோடு உள்ளிட்ட தொழில்நகரங்களில் ஏற்றுமதி பெருமளவு முடங்கி யுள்ளது.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஜவுளி, விவசாயம் மற்றும் பொறியியல் பொருட்கள் தேக்கம் அடைந்துள்ளன.

இதனால், நிறுவனங்களின் ஒட்டுமொத்த தொழில் மற்றும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவர்களைக் காப்பதற்கு ஒன்றிய அரசிடம் ஒரு தெளிவான திட்டமோ, உறுதியான நடவடிக்கையோ இல்லை.

**3. பெயரளவு நிவாரணங்களால் எந்த பயனும் இல்லை:**

ஒன்றிய அரசு அறிவித்துள்ள ‘RELIEF’ (Resilience & Logistics Intervention for Export Facilitation) திட்டம் வெறும் பெயரளவில் உள்ளதே தவிர, இதனால் ஏற்றுமதியாளர்களுக்கு நடைமுறையில் எந்த பயனும் இல்லை. இந்த திட்டத்தில், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதுவரை என்ன ஆய்வு செய்யப்பட்டது? என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? தொழில்துறையினருக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் தேவை அவர்களின் வர்த்தகம் தடையின்றி நடைபெறுவதற்கான சூழல். அது ஏற்படும் வரை: இழப்பீடுகள் மானியங்கள் வங்கிக்கடன்களில் தளர்வுகள் ஆகியவை வழங்கப்பட வேண்டும்.

இதை உறுதிப்படுத்தாமல், Rhyming திட்டங்களை குறிப்பிட்டு விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

முதலமைச்சர் அவர்கள் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வரும் படி, மேற்காசியப் போர் பதற்றத்தில் இருந்து சாமானிய மக்கள், தொழில் துறையினர், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் காக்க ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்!

இவ்வாறு ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, மத்திய கிழக்கு பகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம் கரூர் பிரேம் மகாலில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் , மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக , பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பூத்(மண்டல ) பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி , மாவட்டம், பகுதி, வார்டு சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாநகர .திமுக 28 வது வட்டம் பொதுக்குழு உறுப்பினர், மாமன்ற உறுப்பினர் அன்பகம் சந்தோஷ் ஏற்பாட்டில் . 25 பேர் அ.தி.மு.க.விலிருந்து விலகி. கழக இலக்கிய அணி துணைத்தலைவர். சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் முன்னிலையில்கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் மாவட்டதி.மு.க. பிரதிநிதி..எம்.ஏ.ஜேம்ஸ். புதுக்கோட்டைவடக்குமாவட்டதிமுகஇலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ. மரிய எட்வின். வட்டப் பிரதிநிதிகள் கா.ராமு. மருதமுத்து. அ.ஹென்றி ,அ.முருகன் சி.எட்வர்ட் , ரூபன், கிளாசிக் சி.ராபர்ட். இரா. இளங்கோ. பாஸ்கரன். ஜெ.ஜ்லிராஜ், ஜான் . விக்ரமன், மணிமாறன், த. ஜெகன்) அ.பெர்னாட் மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



திருவாரூர் வழிதடத்தில் இயங்கி கொண்டிருக்கும் கம்பன் விரைவு ரயிலை தடம் மாற்றம் செய்வதை கண்டித்து, திருவாரூர் வர்த்தகர் சங்கம் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகள், திருவாரூர் மாவட்ட இரயில் உபயோகிப்பாளர்கள் சங்கம் மற்றும் அனைத்து சேவை சங்கங்கள் இணைந்து நடத்திய கடையடைப்பு மற்றும் கண்டன உண்ணாவிரத போராட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கலத்துகொண்டு ஒன்றிய அரசின் ரயில்வே துறைக்கு எதிராக கண்டன உரையாற்றினார். உடன் வை.செல்வராஜ் எம்.பி, க.மாரிமுத்து எம்.எல்.ஏ., நகர செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ் , ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்தர், பேரூர் செயலாளர் பூண்டி.கே. கலைவேந்தன் மற்றும் வர்த்தகர் சங்கம், சமூக அமைப்புகள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.